17.03.2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No. 20/2019**

அ.சா.**8**

**பெயர். திரு. நசீர் பாஷா**

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**1, 2, 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**என் முதல் மனைவி பெயர் ஷகினா என்றால் சரிதான். எனது இரண்டாவது மனைவி பெயர் பரிதா என்றால் சரிதான். எனது இரண்டாவது திருமணம் திருவண்ணாமலை ஜமாத்தில் தான் நடந்தது என்றால் சரிதான். எனது இரண்டாவது திருமணம் திருவண்ணாமலை ஜமாத்தில் நடைபெற அப்துல் ஜபார் தான் எனக்கு உதவி செய்தார் என்றால் சரியல்ல. எனது நண்பர்கள் ஜமாத்காரர்கள் அனைவரும் சேர்ந்து தான் அங்கு எனக்கு திருமணம் செய்தார்கள். காரணம் எனக்கு ஊரில் 3 இளம் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களது நல்வாழ்விற்காக எனக்கு திருமணம் செய்தார்கள். சம்பவம் நடந்த அன்று 27 ந்தேதி என்னையும் காவல் துறையினர் விசாரித்தார்கள் என்றால் அன்று என்னை விசாரிக்கவில்லை. அடுத்த நாள் என்னை விசாரித்தார்களா என்றால் அடுத்த நாள் விசாரித்தார்கள். என்னை விசாரிக்கும் போது மோகன் ஏற்கனவே அங்கு இருந்தார். என்னை விசாரிக்கும்போது மோகனையும் விசாரித்தார்கள் என்றால் சரிதான். என்னை தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் விசாரித்தார்கள் என்றால் இல்லை. ஒரு நாள் தான் விசாரித்தார்கள். வீரன் கோவில் வழியாக தான் கிராம நிர்வாக அலுவலகம், வங்கி,**

கூட்டுறவு வேளாண்மை வங்கி, பள்ளிக்கூடம், ஆகியவற்றிற்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். எங்கள் ஊர் பஞ்சாயத்து தேர்தலில் எதிரி மோகனும், புகார்தாரர் சம்சுதீனும் நின்றார்கள் என்றால் சம்சுதீன் நின்றார். மோகன் தேர்தலில் நின்றது எனக்கு தெரியாது. சம்சுதீன் 2016 தேர்தலில் நின்றார் என்றால் சரிதான். 2018 ல் சம்சுதீன் மீண்டும் வேட்பு மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நாங்கள் எல்லாம் சம்சுதீனுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தோம் என்றால் சரிதான். என்னுடைய நிலத்தின் சர்வே எண் ஞாபகம் இல்லை. பட்டா எண் தெரியும். என்னை போலீசார் விசாரிக்கும் போது நான் எனது நிலத்திற்கு போனேன் என்று சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் விசாரிக்கும் போது சொன்னேன். காவல் துறையினர் பதிவு செய்தார்களா என்று எனக்கு தெரியாது. நான் என்ன சொன்னேன் என்பதை தான் காவல் துறையினர் எழுதினார்களா என்ற விவரத்தை எல்லாம் நான் சரிபார்க்க வில்லையா என்றால் சரிபார்க்கவில்லை. நான் அப்துல் ஜபார் இறந்த இடத்திற்கு போன போது அங்கு போலீசார்கள் இருந்தனர் என்றால் சரிதான். நான் அன்று போலீசாரிடம் அந்த எதிரிகளை அங்கு பார்த்த விவரத்தை சொல்லவில்லை. காரணம் பதற்றத்தில் சொல்லவில்லை. வேறு யாரிடமாவது எதிரிகளை அங்கு பார்த்த விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை. நான் பொதுவாக காட்டுக்கு போனால் காலையில் போனால் மாலை தான் வருவேன் என்றால் சரியல்ல. எனக்கு அதுபோன்று 4 காடு உள்ளதால் அனைத்திற்கும் போவேன் வருவேன். சம்பவ இடம் பட்டா எண். 673, கொடியூர் பட்டா எண். 108, இன்னும் இரு நிலங்களின் பட்டா எண். 842, 843, ஆகும். மேலும் 5, 6 பட்டா எண்கள் உள்ளது. கொடியூர், குன்றத்தூர் இரண்டும் பக்கம் பக்கமுள்ள நிலங்கள். ஆனால்

எல்லைகள் மாறும். ஒரு நிலத்திலிருந்து இன்னொரு நிலத்திற்கு செல்ல 5 அல்லது 10 நிமிடங்கள் ஆகும். அன்று நான் இருசக்கர வாகனத்தில் தான் போனேனா என்றால் ஆமாம். இருசக்கர வாகனத்தில் என்னுடன் பாபுலால் என்பவர் வந்தார். இருசக்கர வாகனத்தில் தான் போனேன் என்ற விவரத்தை நான் காவல் துறை வாக்குமூலத்தில் சொன்னேன். நான் அப்போது அங்கு 4 காடுகள் என்ன என்ன பயிர் செய்தேன், என்ற விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை. அதற்கான ஆதாரங்கள் எதையாவது கொடுத்தேனா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் அடையாளம் தெரிந்த நபர் என்று சொல்லியுள்ளேன் என்றும், ஆனால் காவல் துறை விசாரணையில் அடையாளம் தெரிந்த நபர் என்று சொல்லவில்லை என்றும் சொன்னால் அன்று போலீசார் விசாரிக்கும் போது அவர் யார் என்று எனக்கு தெரியவில்லை. பின்பு அவரை பற்றி விசாரித்து யார் என்று தெரிந்துக்கொண்டதால் நீதிமன்றத்தில் அவ்வாறு சொன்னேன். அவரை கைது செய்யும் போது தான்அவர் இன்னார் என்று எனக்கு தெரிந்தது. நான் அவரை குறித்து யார் யாரிடம் விசாரித்தேன் என்றால் அவர் கைது செய்யப்பட்ட பிறகு தான் அவர் யார் என்றே எனக்கு தெரியும். நான் யார் யாரை விசாரித்து எதிரி யார் என்ற விவரத்தை தெரிந்துக்கொண்டேன் என்பதை காவல் துறை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் யாரையும் விசாரித்து தெரிந்துக்கொள்ளவில்லை என்றும், போலீசார் சொன்னதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை வைத்து எதிரிகளை அடையாளம் காட்ட அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தது 27/06/2018 என்றும், காவல் துறையினர் என்னை விசாரணை

செய்தது 1 மாதங்கள் கழித்து 20/07/2018 என்றால் சரிதான். போலீசார் முதலில் இந்த வழக்கில் என்னையே சந்தேகப்பட்டு மிரட்டினார்கள் என்றும், என்னை காவல் நிலையத்தில் உட்கார வைத்தார்கள் என்றும், போலீசார் என்னிடம் நீ இந்த வழக்கில் சாட்சியாக இருந்தால் உன்னை எதுவும் செய்ய மாட்டோம் என மிரட்டியதாலும் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வீரன் கோவில் அருகில் என் நிலம் இருந்தது என்பதை காண்பிக்க எந்த ஆவணத்தையும் நான் போலீசாரிடமும் கொடுக்கவில்லை, நீதிமன்றத்திலும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் இறந்து போன சம்சுதீனுக்கும் எதிரி மோகனுக்கும் இடையே தேர்தல் தகராறு இருந்தது என்றும், அதனால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

<u>இல்லை.</u>